தினமணி

**தமிழகம், புதுவையில் இன்று மழை வாய்ப்பு**

First Published : 15 Nov 2010 12:49:59 AM IST



சென்னை, நவ. 14: தமிழகம், புதுவையில் சில இடங்களில் திங்கள்கிழமை இடி, மின்னலுடன் கூடிய மழை பெய்யக் கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

மழைப்பொழிவு:

தமிழத்திலேயே அதிகபட்சமாக முதுகுளத்தூர், பவானிசாகர், நாகர்கோவில் ஆகிய இடங்களில் 40 மில்லி மீட்டர் அளவுக்கு மழை கொட்டியது.

இதர இடங்களில் ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணி வரை பதிவாகியுள்ள மழை அளவு விவரம் (மில்லி மீட்டரில்): மயிலாடி, சத்தியமங்கலம் 30, பட்டுக்கோட்டை, சூரங்குடி, விளாத்திகுளம், திருப்பத்தூர் 20, தொண்டி, சேரன்மாதேவி, திருச்செந்தூர், பூதப்பாண்டி, தக்கலை, குன்னூர், கோத்தகிரி, திருச்சுழி 10.

சென்னையில்... நகரில் திங்கள்கிழமை பொதுவாக வானம் மேக மூட்டத்துடன் காணப்படும்.

சில இடங்களில் இடி மின்னலுடன் கூடிய மழை பெய்யக்கூடும்

**நவீன மீன்பிடி பயிற்சிக்கு விண்ணப்பிக்கலாம்: மாவட்ட ஆட்சியர் தகவல்**

First Published : 14 Nov 2010 12:56:47 PM IST

நாகர்கோவில், நவ. 13: நவீன மீன்பிடி பயிற்சிக்கு விண்ணப்பிக்கலாம் என்று மாவட்ட ஆட்சியர் ராஜேந்திர ரத்னூ தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக சனிக்கிழமை அவர் வெளியிட்ட செய்திக் குறிப்பு:

கன்னியாகுமரி மாவட்ட மீனவர், மீன்சார்ந்த தொழில் செய்வோர் மற்றும் தொழில் முனைவோர் திறனை மேம்படுத்தும் வகையில், குளச்சலில் செயல்படும் மீன்துறை உதவி இயக்குநர் அலுவலகத்தில் ஆண்டுதோறும் நவீன மீன்பிடி பயிற்சி மற்றும் சிறுதர கம்மியர் பயிற்சி நடத்தப்பட்டு வருகிறது.

இந்த பயிற்சி மூலம் மீனவர், மீன்சார்ந்த தொழில் செய்வோர் மற்றும் தொழில்
முனைவோர் நவீன மீன்பிடி உத்திகளைக் கையாண்டு குறைந்த முதலீட்டில் அதிக வருமானம் பெறவும் மற்றும் நடுக்கடலில் ஏற்படும் இயந்திரப் பழுதை தாங்களாகவே சரிசெய்து கொண்டு பத்திரமாக கரை திரும்பவும் உதவியாக இருக்கும்.

2011-ம் ஆண்டில் 10 மாதங்களுக்கு இந்த நவீன மீன்பிடிப் பயிற்சி மற்றும் சிறுதர கம்மியர் பயிற்சி அளிக்கப்படவுள்ளது.

இப்பயிற்சியில் சேர்ந்து பயன்பெற விரும்புவோர், பயிற்சிக்கான விண்ணப்பப் படிவத்தை விண்ணப்பக் கட்டணம் ஏதுமின்றி குளச்சலில் உள்ள
மீன்துறை உதவி இயக்குநர் அலுவலகத்தில் காலை 10 மணி முதல் மாலை 5.45 மணி வரை நேரில் பெற்றுக்கொள்ளலாம்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை டிச. 10-க்குள் இந்த அலுவலகத்தில் அளிக்க வேண்டும். அலுவலக தொலைபேசி எண்- 04651-226235.

பயிற்சி குறித்த விவரம்:

பயிற்சியின் பெயர் மற்றும் மாணவர்கள் எண்ணிக்கை: நவீன மீன்பிடி பயிற்சி- 50 மாணவர்கள், சிறுதர கம்மியர் பயிற்சி- 20 மாணவர்கள்.

பயிற்றுவிக்கப்படும் பாடங்கள்:

மீன்பிடி முறைகள், மாலுமி இயல் மற்றும் கடலாண்மை, இயந்திர பாடம்.

பயிற்சிக் காலம்- 2.1.2011 முதல் 31.10.2011 வரை.

கல்வித் தகுதி- 8-ம் வகுப்பு தேர்ச்சி, வயது- 18 முதல் 35 வயது வரை.

உபகார சம்பளம்- மாதம் ஒன்றுக்கு ரூ. 400.

அளிக்கப்படும் கூடுதல் பயிற்சிகள்- முதலுதவி பயிற்சி, கடலோர காவல்படை மூலம் பயிற்சி.

**புதிய தொழில்நுட்பத்தில் கொடுவா மீன்கள் அறுவடை**

First Published : 14 Nov 2010 11:47:11 AM IST

காரைக்கால், நவ. 13: காரைக்காலில் உற்பத்தியை பெருக்கும் புதிய தொழில்நுட்ப முறையில் கொடுவா மீன் அறுவடை மத்திய அரசின் மீன் வளர்ப்பு பண்ணையில் வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

மத்திய தொழில் மற்றும் வர்த்தகத் துறை அமைச்சகத்தின் நிறுவனமான நீர்வாழ் உயிரின வளர்ப்பு மையம் காரைக்கால் மாவட்டம், கருக்களாச்சேரியில் உள்ளது. இங்கு கொடுவா மீன் குட்டையிலும், கூண்டு முறையிலும் வளர்க்கப்படுகிறது.

கூண்டில் ஒரு முறை விடப்படும் கொடுவா மீன் குஞ்சுகள் வளர்ச்சியடைந்து அறுவடை செய்ய குறைந்தது 6 மாதங்கள் ஆகும். இந்த நிலையில், மாதம்தோறும் அறுவடை செய்யும் வகையில், புதிய தொழில்நுட்பத்தில் வளர்க்கப்பட்ட கொடுவா மீன்கள் அறுவடை வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

இதுகுறித்து இந்த மையத்தின் திட்ட உதவி மேலாளர் கே. கணேஷ் கூறியது:

ஒரு கூண்டில் 4000 கொடுவா மீன் குஞ்சுகள் விடப்படுகின்றன. அடுத்து ஒரு மாதம் இடைவெளி விட்டு, மீண்டும் 4000 மீன் குஞ்சுகள் விடப்பட்டன. இந்த முறை கடந்த ஜூலை மாதம் தொடங்கப்பட்டது. இதன்மூலம், ஒவ்வொரு மாதமும் அறுவடை செய்வதை 36 மாதங்கள் தொடரமுடியும் எனக் கண்டறிந்து, மீன்களுக்கு எந்த பாதிப்பும் நேராத வகையில், புதிய தொழில்நுட்ப முறையில் பாதுகாத்து வந்தோம்.

இதையடுத்து, முதல் முறையாக 400 கிலோ மீன்கள் அறுவடை செய்து பெங்களூருக்கு அனுப்பப்பட்டது. விவசாயிகள் இந்த முறையை கையாண்டால் 2.5 ஏக்கரில் மாதம் ரூ. 30 ஆயிரம் வரை லாபம் ஈட்டமுடியும்.

ஏற்றுமதி செய்யும் அளவுக்கு கொடுவா மீன் இந்தியாவில் அதிகமாக வளர்க்கப்படவில்லை. தற்போது விவசாயிகளிடையே ஆர்வம் ஏற்பட்டு, இங்கு வந்து தொழில்நுட்பத்தை அறிந்துச் செல்கின்றனர்.

அடுத்த ஓரிரு ஆண்டுகளில் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் அளவிற்கு முன்னேற்றம் ஏற்படும் என்றார் கணேஷ்.

**பெரிய வெங்காயம் விலை கடும் உயர்வு!**

First Published : 14 Nov 2010 09:29:50 AM IST

கோவை, நவ. 13: மழையால் ஏற்பட்ட வரத்து குறைவு காரணமாக வெங்காயத்தின் விலை கடுமையாக உயர்ந்துள்ளது. பெரிய வெங்காயம் கிலோ ரூ. 35-லிருந்து ரூ. 40 வரையிலும், சின்னவெங்காயம் கிலோ ரூ. 25-லிருந்து ரூ. 30 வரையிலும் விற்பனையானது.

கடந்த வாரத்தில் கிலோ ரூ. 20-லிருந்து ரூ. 25 வரை விற்பனையான பெரிய வெங்காயம் தற்போது கிலோவுக்கு ரூ. 15 வரை உயர்ந்துள்ளது.

மகாராஷ்டிர மாநிலம் புனே, கர்நாடக மாநிலம் பெங்களூர் ஆகிய இடங்களில் இருந்து பெரிய வெங்காயம் வருகிறது. இதில் மகாராஷ்டிர வெங்காயத்துக்குத் தான் வரவேற்பு அதிகமாக

இருக்கும். பெங்களூர் வெங்காயம் சுவை குறைவு, அளவில் சிறியதாக இருப்பதால் வரவேற்பு சற்று குறைவாகவே இருக்கும்.

இவ்விரு இடங்களில் இருந்து நாளொன்றுக்கு லாரிகளில் 50 லோடுகள் வரை கோவையில் உள்ள எம்ஜிஆர் மொத்த காய்கறி மார்க்கெட்டுக்கு வருவது வழக்கம். இங்கிருந்து கேரளத்துக்கும், சிறிய மார்க்கெட்டுகளுக்கும் வியாபாரிகள் வாங்கிச் செல்கின்றனர்.

இதேபோல, சாயிபாபா காலனி அண்ணா மார்க்கெட், தியாகி குமரன் மார்க்கெட்டுகளுக்கு நாளொன்றுக்கு 2-லிருந்து 3 லோடு வெங்காயம் வரத்து இருக்கும்.

கடந்த சில நாள்களாகப் பெய்து வரும் மழை காரணமாக மகாராஷ்டிரம், கர்நாடகத்தின் வரத்து வெகுவாகக் குறைந்துவிட்டது. உள்ளூரில் பெரிய அளவுக்கு வெங்காயம் வருவதில்லை. இதனால் கடந்த சில நாள்களாக 10 லோடுகள் மட்டுமே வந்து கொண்டிருக்கிறது.

மொத்த விற்பனை விலையில் பெரிய வெங்காயம் கிலோ ரூ. 35-லிருந்து ரூ. 40 வரையில் விற்பனை செய்யப்பட்டது. சில்லரை விலையில் மக்களுக்கு கிடைக்கும் ரூ. 3 வரை கூடுதலாகிறது.

சாம்பார் வெங்காயம் என அழைக்கப்படும் சின்ன வெங்காயத்தின் விலையும் கடுமையாக உயர்ந்துள்ளது. கர்நாடக மாநிலம் மைசூர், கோவையை சுற்றியுள்ள கிராமப்புற பகுதிகள், ஈரோடு மாவட்டம் சத்தியமங்கலம், கோபிசெட்டிபாளையம் பகுதிகளில் இருந்து கோவை மார்க்கெட்டுகளுக்கு சின்னவெங்காயம் வருகிறது. மழை காரணமாக உள்ளூர் வெங்காயத்தின் வரத்து குறைந்துவிட்டது. வெளியிடங்களில் இருந்து வரும் வெங்காயமும் ஈரப்பதமாக இருப்பதால் நீண்டநாள்களுக்கு வைத்து விற்பனை செய்ய முடியாது. மார்க்கெட்டுகளுக்கு வழக்கமாக வரும் லோடுகளில் பாதியளவு மட்டுமே தற்போது வந்து கொண்டிருக்கிறது.

பட்டறைகளில் சேமித்து வைக்கப்பட்ட தரமான சின்ன வெங்காயம் மட்டுமே அதிகளவில் விற்பனையாகிறது என்பதால், அதன் விலையும் கடுமையாக உயர்ந்துவிட்டது. சனிக்கிழமை நிலவரப்படி தரமான சின்னவெங்காயம் ரூ. 25-லிருந்து ரூ. 30 வரை விற்பனையானது.

**துவரை: நடவுமுறை சாகுபடி பயிற்சி**

First Published : 14 Nov 2010 09:17:08 AM IST

விருத்தாசலம், நவ. 13: விருத்தாசலம் அடுத்த குப்பநத்தம் கிராமத்தில் நடவு செய்யப்பட்ட துவரை சாகுபடி குறித்த பயிற்சி அண்மையில் நடைபெற்றது.

÷தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் மற்றும் விருத்தாசலம் வேளாண்மை அறிவியல் நிலையம் சார்பில் குப்பநத்தம் கிராமத்தில் நடவு செய்யப்பட்ட துவரை சாகுபடி குறித்த விழிப்புணர்வுக் கூட்டம் நடைபெற்றது. இதில் துவரையில் நேரடி விதைப்புக்கும், நடவு

செய்யப்பட்ட முறைக்கும் உள்ள வேறுபாட்டை எடுத்துரைத்து தனித் துவரை சாகுபடியின் முக்கியத்துவத்தை வேளாண்மை அறிவியல் நிலையத்தின் திட்ட ஒருங்கிணைப்பாளர் கா.சுப்பிரமணியன் விளக்கினார்.

÷நிகழ்ச்சியில் வேளாண்மை அறிவியல் நிலையத்தைச் சேர்ந்த முனைவர்கள் மா.ராஜூ, ப.அருட்செந்தில், வே.விஜயகீதா, தனுஷ்கோடி, சு.கண்ணன் மற்றும் விவசாயிகள் பலர் கலந்துகொண்டனர்.

**நடப்பாண்டில் பூண்டி ஏரியில் 3 லட்சம் மீன் குஞ்சுகள்**

First Published : 14 Nov 2010 09:03:03 AM IST

திருவள்ளூர், நவ. 13: மீன் உற்பத்தியை அதிகரிக்கவும் மீனவர்கள் பொருளாதாரத்தை மேம்படுத்தும் வகையில் நடப்பாண்டில் பூண்டி ஏரியில் 3.06 லட்சம் மீன் குஞ்சுகள் இருப்பு செய்யப்பட்டுள்ளதாக பொன்னேரி மீன்வளத்துறை இயக்குநர் ரவிச்சந்திரன் தெரிவித்தார்.

÷ஆண்டுதோறும் திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ள மீனவர்களின் பொருளாதாரத்தை மேம்படுத்தவும், மீன் உற்பத்தியை அதிகரிக்கவும் பூண்டி ஏரியில் மீன் குஞ்சுகளை இருப்பு செய்வது வழக்கம்.

÷இந்த ஆண்டுக்கான மீன் இருப்பு கடந்த புதன்கிழமை செய்யப்பட்டது. 2.30 லட்சம் மிர்கால் வகை மீன்களும், 0.76 லட்சம் ரோகு வகை மீன் குஞ்சுகளும் சேர்த்து மொத்தம் 3. 06 லட்சம் மீன் குஞ்சுகள் இருப்பு செய்யப்பட்டன.

÷இந்நிகழ்ச்சியின்போது, மீன்துறை ஆய்வாளர் கங்காதரன், ஆராய்ச்சி உதவியாளர் முத்துலட்சுமி, பூண்டி பொதுப்பணித்துறை உதவி பொறியாளர் ஏழுமலை உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.

**மீன்களை பக்குவப்படுத்த பயிற்சி**

First Published : 14 Nov 2010 10:31:48 AM IST

ராமேசுவரம், நவ. 13: தங்கச்சிமடம் சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனத்தில், மீன்களை பக்குவப்படுத்தும் பயிற்சி முகாம் வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனமும், தேசிய மீன் வளர்ச்சி வாரியமும் இணைந்து மீன்களை சுகாதார முறையில் கையாண்டு பக்குவப்படுத்தவும், கடலில் படகை சுத்தமாக வைத்திருப்பது குறித்தும் ராமேசுவரம், தங்கச்சிமடம், பாம்பனை சேர்ந்த மீனவர்களுக்கு பயிற்சி முகாம் நடந்தது.

இம்முகாமில் கிராம வள மைய அலுவலர் ஸ்ரீகிருபா வரவேற்றார். மண்டபத்தில் உள்ள மத்திய கடல் மீன் ஆராய்ச்சி நிலைய தலைமை விஞ்ஞானி கோபக்குமார் பயிற்சி குறித்து விளக்கமளித்தார்.

ராமேசுவரம் மீன் துறை உதவி இயக்குநர் மோகன், சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவன ஒருங்கிணைப்பாளர் வேல்விழி, மீன் சுத்தம் செய்தல், துறைமுகத்தில படகு பராமரிப்பு குறித்து விடியோ மூலம் விளக்கினர்.

இந்திய கடலோர காவல்படை வீரர்கள் பிரான்சிஸ், ஸ்விர் சிங், சுனில்குமார் ஆகியோர் கடல் பாதுகாப்பு குறித்து விளக்கினர்.

இதற்கான ஏற்பாடுகளை கிராம வள மைய பணியாளர்கள் கெவிக்குமார், அருண், சலாம் ஆகியோர் செய்திருந்தனர்.

**செம்மை கரும்பு சாகுபடி கருத்தரங்கம்**

First Published : 14 Nov 2010 12:22:50 PM IST

திருவண்ணாமலை, நவ. 13: திருவண்ணாமலை மாவட்ட கூட்டுறவு ஒன்றியம், இப்ஃகோ உர நிறுவனம் சார்பில் செம்மை கரும்பு சாகுபடி கருத்தரங்கம் வண்ணாங்குளம் கிராமத்தில் வியாழக்கிழமை நடைபெற்றது.

இப்ஃகோ உர நிறுவன இயக்குநர் ஏ.ராய் தலைமை தாங்கினார். செம்மை கரும்பு சாகுபடி குறித்து முன்னோடி விவசாயி அசோக்கின் நிலத்தில் செயல்முறை விளக்கம் அளிக்கப்பட்டது.

மண்டல இணைப்பதிவாளர் ச.சுப்பிரமணியன், இப்ஃகோ நிறுவன அதிகாரிகள் கோவிந்தராஜ், டி.மஞ்சுநாத், பி.ஆலப்புனார், செய்யாறு துணைப்பதிவாளர் மனோகரன், தரணி சர்க்கரை ஆலை பொதுமேலாளர் எம்.செங்கூட்டுவேல் உள்பட பலர் கலந்துகொண்டனர்.

தினமலர்

**மஞ்சள் விலை திடீர் உயர்வு: விவசாயிகள் மகிழ்ச்சி**

பதிவு செய்த நாள் : நவம்பர் 15,2010,04:02 IST

ஆத்தூர்: ஆத்தூர் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் நடந்த ஏலத்தில், மஞ்சள் விலை குவிண்டாலுக்கு 705 ரூபாய் உயர்ந்து 15 ஆயிரத்து 304 ரூபாய்க்கு

விற்றதால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.ஆத்தூர் புதுப்பேட்டை வேளாண்மை உற்பத்தியாள்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் வாரந்தோறும் சனிக்கிழமை இரவு மஞ்சள் ஏலம் நடக்கிறது. இந்த ஏலத்தில் ஆத்தூர், தலைவாசல், கெங்கவல்லி, தம்மம்பட்டி உள்ளிட்ட கள்ளக்குறிச்சி, திருவண்ணாமலை, சின்னசேலம், பெரம்பலூர், கடலூர் ஆகிய பகுதியை சேர்ந்த விவசாயிகள்விளைவித்த மஞ்சளை கொண்டு வந்து விற்பனை செய்கின்றனர்.வேளாண்மை உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் மார்ச் மாதம் நடந்த மஞ்சள் ஏலத்தில் குவிண்டால் 10 ஆயிரத்து 789 ரூபாய்க்கு விற்றது. தொடர்ந்து மஞ்சள் விலை ஏறுமுகமாகச் சென்று 16 ஆயிரத்து 330 ரூபாய்க்கு விற்றது. அடுத்தடுத்த வாரங்களில் நடந்த ஏலத்தில் மஞ்சள் விலை படிப்படியாக இறங்கு முகமாக இருந்தது.

அதனால், மஞ்சள் மூட்டைகளை இருப்பு வைத்த விவசாயிகள் கவலையடைந்தனர். செப்டம்பர் மாதம் நடந்த ஏலத்தில் ஒரு குவிண்டால் மஞ்சள் 15 ஆயிரம் ரூபாயாகதிடீரென விலை அதிகரித்தது. அக்டோபர் மாதம் அடுத்தடுத்த வாரங்களில் நடந்த ஏலத்தில் குவிண்டால் 14 ஆயிரத்து 599 ரூபாயாக விலை குறைந்தது.தீபாவளி மற்றும் தொடர் மழையால், கடந்த 6ம் தேதி நடக்க இருந்த மஞ்சள் ஏலம் ஒத்திவைக்கப்பட்டது.

நேற்று முன்தினம் 13ம் தேதி இரவு நடந்த ஏலத்தில் விரலி மஞ்சள் அதிகபட்சமாக 15 ஆயிரத்து 304 ரூபாயும், குறைந்தபட்சமாக 14 ஆயிரத்து 859 ரூபாயும், உருண்டை மஞ்சள் அதிகபட்சம் 14 ஆயிரத்து 491 ரூபாயும், குறைந்த பட்சம் 14 ஆயிரத்து 381 ரூபாயும், பனங்காலி மஞ்சள் அதிகபட்சம் 12 ஆயிரத்து 977 ரூபாயும், குறைந்த பட்சம் 4,589 ரூபாய்க்கும் விற்பனையானது.ஏலத்தில் 200 மூட்டைகள் கொண்ட 105 குவிண்டால் 15 லட்சம் ரூபாய்க்கு வர்த்தகம் நடந்தது. கடந்த வாரம் மஞ்சள் ஏலம் ஒத்திவைக்கப்பட்ட நிலையில் நேற்று முன்தினம் நடந்த ஏலத்தில் குவிண்டாலுக்கு 705 ரூபாய் உயர்ந்து 15 ஆயிரத்து 304 ரூபாய்க்கு விற்றதால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

**உணவுப் பொருட்களை பதப்படுத்தி பாதுகாக்க அதிநவீன தொழில்நுட்பம் தந்து உதவத் தயார்**

பதிவு செய்த நாள் : நவம்பர் 14,2010,23:46 IST



புதுடில்லி : "இந்தியாவில் விவசாய விளை பொருட்கள் வீணாவதை தடுக்கும் வகையில், அதிநவீன பதப்படுத்தும் தொழில்நுட்பங்களை வழங்க தயாராக இருப்பதாக ஐரோப்பிய நிறுவனங்கள் தெரிவித்துள்ளன. டில்லியில் சர்வதேச கோல்டு செயின் ஸ்டோரேஜ் நிறுவனங்களின் கூட்டமைப்பின்(ஜி.சி.சி.ஏ.,) சார்பில், வர்த்தக கண்காட்சி நடந்தது. இதில் பிரான்ஸ், நெதர்லாந்து, பெல்ஜியம் உள்ளிட்ட ஐரோப்பிய நாடுகளின் கோல்டு செயின் ஸ்டோரேஜ் நிறுவனங்கள் கலந்து கொண்டன. கண்காட்சியில், விவசாய விளைபொருட்களை பதப்படுத்தும் அதிநவீன "கோல்டு செயின் ஸ்டோரேஜ்' தொழில்நுட்பம் பற்றி விரிவான விளக்கங்கள் அளிக்கப்பட்டன.

இந்த கண்காட்சி குறித்து உணவு மற்றும் பதப்படுத்துதல் துறை செயலர் அசோக் சின்கா கூறியதாவது: உலகின் மிகப்பெரிய விவசாய நாடுகளில் ஒன்றாக இந்தியா திகழ்கிறது. ஆனால், நாட்டில் உற்பத்தியாகும் உணவுப்பொருட்களை பாதுகாப்பதற்கு அனைத்து வசதிகளுடன் கூடிய கிடங்குகள் இல்லாததால், ஆண்டுதோறும் 70,000 கோடி ரூபாய் மதிப்புடைய நெல், கோதுமை மற்றும் பழங்கள் ஆகியவை வீணாவதாக மதிப்பிடப்பட்டுள்ளது. இதனால் விவசாயிகள் மற்றும் அரசாங்கத்திற்கு கடும் பொருளாதார இழப்பு ஏற்படுகிறது.இதை தடுக்கும் வகையில், இந்தியாவில் விவசாய விளை பொருட்களை "கோல்டு செயின் ஸ்டோரேஜ்' என்ற அதிநவீன தொழில்நுட்பத்தில் பதப்படுத்தும் முறையை ஊக்கும்விக்கும் நோக்கில், இந்த கண்காட்சி நடத்தப்படுகிறது.

மேலும், கோல்டு செயின் ஸ்டோரேஜ் கிடங்குகளை அமைப்பதற்கு, விவசாயிகளுக்கு வங்கிகள் எளிய முறையில் கடனுதவி வழங்குவது குறித்தும் பரிசீலிக்கப்படும். இந்தியாவில் கோல்டு செயின் ஸ்டோரேஜ் சந்தையின் மதிப்பு தற்போது 12,000 கோடியாக உள்ளது. வரும் 2015ம் ஆண்டில் இதன் சந்தை மதிப்பு 60,000 கோடியாக உயரும். எனவே கோல்டு செயின் ஸ்டோரேஜ் துறைக்கு இந்தியாவில் சிறப்பான எதிர்காலம் உள்ளது. இதை கருத்தில் கொண்டு, இந்திய

நிறுவனங்களுடன் இணைந்து கோல்டு செயின் ஸ்டோரேஜ் கிடங்குகளை அமைக்கவும், தொழில்நுட்பங்களை பகிர்ந்து கொள்ளவும் ஐரோப்பிய நிறுவனங்கள் விருப்பமும், ஆர்வமும் தெரிவித்துள்ளன. இவ்வாறு அசோக் சின்கா கூறினார்.

**முட்டை விலை ஒரே நாளில் 10 காசு சரிவு**

பதிவு செய்த நாள் : நவம்பர் 14,2010,02:48 IST

நாமக்கல்: தமிழகம், கேரளாவில் முட்டை விலை 280 காசுகளாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. ஏறுமுகமாக இருந்த முட்டை விலை, நேற்று ஒரே நாளில் 10 காசு சரிந்துள்ளது.
நாமக்கல்லில் தேசிய முட்டை ஒருங்கிணைப்புக் குழு கூட்டம் நடந்தது. முட்டை உற்பத்தி, மார்க்கெட் நிலவரம் குறித்து பண்ணையாளர்கள் விவாதித்தனர். அதையடுத்து, 290 காசுகளுக்கு விற்பனை செய்யப்பட்ட முட்டை 10 காசு குறைத்து 280 காசாக நிர்ணயிக்கப்பட்டது. கடந்த சில வாரங்களாக முட்டை விலை ஏறுமுகமாக இருந்தது. அதிகபட்சமாக 290 காசுகளாக முட்டை விலை உயர்ந்தது. இந்நிலையில், நேற்று ஒரே நாளில் முட்டை விலை 10 காசு சரிந்து 280 காசாக நிர்ணயம் செய்யப்பட்டது.
இதுகுறித்து தேசிய முட்டை ஒருங்கிணைப்புக்குழு நாமக்கல் மண்டல சேர்மன் செல்வராஜ் கூறியதாவது: நாடு முழுவதும் முட்டை விலை குறைக்கப்பட்டுள்ளது. அதனால் நாமக்கல் மண்டலத்திலும் முட்டை விலையை குறைக்க வேண்டியநிலை ஏற்பட்டுள்ளது. மேலும், மைனஸ் ரேட் 25 காசு வரை கொடுக்க வேண்டியிருந்ததும், முட்டை விலை குறைப்புக்கு முக்கிய காரணம். இவ்வாறு அவர் தெரிவித்தார்.
நாட்டின் பிற மண்டலங்களில் முட்டை விலை விவரம்: ஹைதராபாத் 276 காசு, விஜயவாடா, தனுகு 274 காசு, சென்னை 298 காசு, மைசூரு 290 காசு, பெங்களூரு 290 காசு, மும்பை 301 காசு, டில்லி 295 காசு, பர்வாலா 280 காசு, கோல்கத்தா 300 காசு. நாமக்கல்லில் நேற்று நடந்த பண்ணையாளர், வியாபாரிகள் ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில், முட்டைக் கோழி விலை 2 ரூபாய் குறைத்து 38 ரூபாயாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. பல்லடத்தில் நடந்த கறிக்கோழி உற்பத்தியாளர் ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில், கறிக்கோழி விலை 43 ரூபாயாக நிர்ணயிக்கப்பட்டது.

**கேரள தென்னை விவசாயிகள் கம்பம் பகுதியில் ஆய்வு**

பதிவு செய்த நாள் : நவம்பர் 14,2010,01:55 IST

கம்பம் : கேரள தென்னை விவசாயிகள் குழு, கம்பம் பகுதியில் தென்னந்தோப்புகளில் ஆய்வு செய்து ஊடுபயிர் சாகுபடி தொழில்நுட்பங்களை கேட்டறிந்தனர்.

கேரள மாநிலம் கொல்லம் பகுதியை சேர்ந்த விவசாயிகள் 44 பேரை, தென்னை வளர்ச்சி வாரியத்தின் தமிழக பிரிவு கள அலுவலர் பரமசிவம் மற்றும் தேனி மாவட்ட தென்னை விவசாயிகள் சங்க செயலா ளர் பன்னீர்செல்வம் ஆகியோர் தேனி மாவட்டத்திற்கு அழைத்து வந்தனர். கோம்பை, சின்னமனூர் பகுதிகளில் பல்வேறு தென்னந்தோப்புகளில் ஆய்வுகள் நடத்தினர். காக்கில்சிக்கையன்பட்டியில் தென்னை விவசாயி சிவாஜியின் தோப்பில் தென்னையில் ஊடுபயிராக சாகுபடி செய்யப்பட்டுள்ள கோகோ மற்றும் புதுப்பட்டியில் ஊடுபயிராக சாகுபடி செய்யப்பட்டுள்ள வாழை பயிர்களை நேரில் பார்வையிட்டு, விபரங்களை கேட்டறிந்தனர்.

சாதாரணமாக ஒரு ஏக்கரில் சாகுபடி செய்யப்பட்டுள்ள தென்னையில் இருந்து வருவாய் 35 ஆயிரம் ரூபாய் கிடைக்கும். ஆனால் வாழை ஊடுபயிராக சாகுபடி செய்யப்படும் போது, ஒரு லட்சம் ரூபாய் வரை வருவாய் கிடைக்கும். வாழைக்கு இடப்படும் உரம் மற்றும் பூச்சி மருந்துகள் தென்னையும் எடுத்துக் கொள்ளும். எனவே பராமரிப்பு செலவுகளும் குறைவு என்று க. புதுப்பட்டியை சேர்ந்த விவசாயி சிவாஜி, கேரள விவசாயிகளுக்கு விளக்கி கூறினார்.

**பயிர்களை காக்க ஆலோசனை**

பதிவு செய்த நாள் : நவம்பர் 14,2010,01:50 IST

தேனி : தேனி ஒன்றியத்தில் துவரை சாகுபடி அதிகளவில் நடந்து வருகிறது.
தற்போது துவரை பூக்கும் பருவத்தில் உள்ளது. டி.ஏ.பி., கரைசல் 2 சதவீதம், அதாவது 12.5 கிலோ டி.ஏ.பி.,யை 25 லிட்டர் தண்ணீரில் முதல் நாள் கரைத்து மறுநாள் தெளிந்த நீரை வடித்து 625 லிட்டர் தண்ணீரில் கரைத்து ஒரு ஹெக்டேருக்கு கைத்தெளிப்பான் மூலம் பயிர்கள் நனையும் வரை தெளிக்க வேண்டும். பூத்த 15 நாள் கழித்து தெளிக்கவும். இதன் மூலம் அதிகம் விளைச்சல் கிடைக்கும்.

**நீர்பாசன பயிற்சி முகாம்**

பதிவு செய்த நாள் : நவம்பர் 14,2010,22:28 IST

ஆண்டிபட்டி:சொட்டு நீர் பாசனம், தெளிப்பு நீர் பாசனம் மூலம் நீர் சிக்கனம் மற்றும் நீர் மேலாண்மை குறித்த பயிற்சி முகாம் தேனியில் ஒரு வாரம் நடக்கிறது.தமிழக அரசு விவசாய

பொறியியல் துறை, தேனி உதவி செயற்பொறியாளர் அலுவலகம் சார்பில் ஆண்டிபட்டி, பெரியகுளம் பகுதிகளை சேர்ந்த விவசாயிகளுக்கு நவம்பர் 29 முதல் டிசம்பர் 5 வரை நடைபெறும் பயிற்சியில் பங்கு பெறும் விவசாயிகள் 18 முதல் 40 வயதுக்குள் இருக்க வேண்டும்.பயிற்சி பெற விரும்பும் விவசாயிகள் தேனியில் உள்ள உதவி செயற்பொறியாளர் அலுவலகத்திலோ உதவி பொறியாளர் இளங்காவிடமோ நவம்பர் 19க்குள் பதிவு செய்ய வேண்டும். முதலில் தேர்வு செய்யப்படும் 20 விவசாயிகளுக்கு ஒரு வாரம் பயிற்சி அளிக்கப்படும் என்று தேனி விவசாய பொறியியல் துறை உதவி செயற்பொறியாளர் வாசுதேவன் தெரிவித்துள்ளார்.

**கண்மாய் நீரினை சிக்கனமாக பயன்படுத்த வலியுறுத்தல்**

பதிவு செய்த நாள் : நவம்பர் 14,2010,22:28 IST

பெரியகுளம்:கண்மாய் நீரினை விவசாயிகள் சிக்கனமாக பயன்படுத்த வேண்டும் என மஞ்சளார் வடிநிலக்கோட்ட செயற்பொறியாளர் ஜேம்ஸ் லூர்துசாமி கேட்டுக்கொண்டுள்ளார். பெரியகுளம் பொதுப்பணித்துறை மஞ்சளார் வடிநில கோட்டம் நீர்வள ஆதார அமைப்பின் கட்டுப்பாட்டின் கீழ் தேனி, திண்டுக்கல் மாவட்டங்களில் உள்ள கண்மாய்கள் நிரம்பி வருகின்றன. தேனி மாவட்டத்திலுள்ள 99 கண்மாய்களில், அதிகாரிகுளம், நெடுங்குளம், உருட்டிகுளம், கரிசல்குளம் உட்பட 41 கண்மாய்கள் நிறைந்துள்ளன.

இவற்றில் பெரியகுளம், தாமரைக்குளம் கண்மாய்கள் நிறையும் நிலையில் உள்ளது. இதே போல் திண்டுக்கல் மாவட்டங்களில் உள்ள 95 கண்மாய்களில் கருங்குளம், ரங்கசமுத்திரம், மத்தூவார்குளம், தாமரைக்குளம் உட்பட 51 கண்மாய்கள் நிறைந்துள்ளன.கண்மாய்கள் கடந்தாண்டைவிட ஒரு மாதத்திற்கு முன்னதாகவே நிரம்பியுள்ளது. நிரம்பாத கண்மாய்களும் விரைவில் நிரம்பும் நிலை ஏற்பட்டதுள் ளது. மஞ்சளார் வடிநில கோட்ட செயற்பொறியாளர் ஜேம்ஸ்லூர்துசாமி கூறுகையில், "விவசாயிகள் தேங்கியுள்ள கண்மாய் நீரினை சிக்கனமாக பயன்படுத்த உபயோகிக்கவேண்டும். வாய்க்காலில் வரும் நீரினை கண்மாய்களில் சேமிக்கவேண்டும்' என்றார்.

**மரவள்ளியில் "கள்ளிப்பூச்சி': விவசாயிகள் அதிர்ச்சி**

பதிவு செய்த நாள் : நவம்பர் 14,2010,23:08 IST

சிறுபாக்கம் : சிறுபாக்கம் பகுதிகளில் விளைவிக் கப்பட்ட மரவள்ளிக் கிழங்கு பயிரில் "கள்ளிப்பூச்சி' நோய் தாக்குதல் பாதிப்பு ஏற்பட்டதால் விவசாயிகள் அதிர்ச்சியடைந்துள்ளனர். சிறுபாக்கம், மங்களூர், வேப்பூர் உள்ளிட்ட 100 கிராம விவசாயிகள் தங்களின் நீர்ப்பாசன விளை

நிலங்களில் மரவள்ளிக் கிழங்கு பயிரான பர்மா, வெள்ளை ரோஸ், குங்கும ரோஸ் ஆகிய பயிர்களை விளைவிப்பது வழக்கம். ஒரு வருட பயிரான மரவள்ளி ஆண்டு தோறும் டிசம்பர், ஜனவரி மாதங்களில் அறுவடை செய்துவந்தனர். தற்போது மரவள்ளி முதிர்ந்துள்ள நிலையில் "கள்ளிப்பூச்சி' மர்ம நோய் தாக்குதல் ஏற்பட்டுள்ளதால் விவசாயிகள் கடும் அதிர்ச்சியடைந்துள்ளனர்.

இந்நோய் தாக்குதலால் கிழங்கில் மாவுச்சத்து குறைவு, எடை குறைவு, வளர்ச்சி தடைபாடு ஏற்பட வாய்ப் புள்ளது. இதனால் ஏக்கர் ஒன்றுக்கு 200 மூட்டை வரை சாகுபடி செய்யப் பட்ட மரவள்ளி ஏக்கருக்கு 75 மூட்டை கூட அறுவடை செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. முன் எப்போதும் இல்லாத நிலையில் திடீரென இந்த ஆண்டு "கள்ளிப்பூச்சி' நோய் தாக்குதல் ஏற்பட்டுள்ளது. இதனை கட்டுப்படுத்திட மோனோ கொரட்டாபாஸ், அசிபெட் ஆகிய பூச்சி மருந்துகளை விசைத் தெளிப்பான் மூலம் தெளித்தும் நோயினை கட்டுப்படுத்த முடியவில்லை. திடீரென ஏற்பட்டுள்ள நோய் தாக்குதலால் மரவள்ளி பயிரிட்டுள்ள நூற்றுக்கும் மேற்பட்ட விவசாயிகள் கடும் அதிர்ச்சியில் உள்ளனர்.

**விழுப்புரம் மாவட்டத்தில் மழை நிலத்தடி நீர் மட்டம் உயர்ந்தது**

பதிவு செய்த நாள் : நவம்பர் 14,2010,23:39 IST

விழுப்புரம் : விழுப்புரம் மாவட்டத் தில் பெய்த மழையின் காரணமாக நிலத்தடி நீர் மட்டம் கிடு கிடுவென உயர்ந்துள்ளது. தமிழகத்தில் வடகி ழக்கு பருவமழை பரவ லாக பெய்து வருகிறது. விழுப்புரம் மாவட்டத்தி லும் கடந்த சில நாட்களாக பரவலாக பெய்ததால் நீர் நிலைகள் நிரம்பி வருகிறது. மாவட்டத்தில் உள்ள 236 ஏரிகள் முழுவதும் நிரம்பியதோடு மீதமுள்ள ஏரிகள் 50 சதவீதத்திற்கும் மேல் நிரம்பியுள்ளது. கள்ளக்குறிச்சி அருகே உள்ள மணிமுக்தா அணை யில் (கொள்ளளவு 44 அடிக்கு) 29.40 அடி நீர்மட்டமும், கோமுகி அணையில் (46 அடிக்கு) 44 அடியும், வீடூர் அணையில் (32க்கு) 28 அடியும், சாத்தனூர் அணையில் (119க்கு) 105 அடி நீர் மட்டமும் நிரம் பியுள்ளது.

பரவலான மழையின் காரணமாக மாவட்டத்தில் உள்ள தென்பெண்ணை, சங்கராபரணி உள்ளிட்ட ஆறுகளில் மழை நீர் பெருக் கெடுத்துள்ளது. ஏரி, கிணறுகள், குளங்களில் நீர் நிரம்பியுள்ளதால் நிலத்தடி நீர் மட்டம் கிடுகிடுவென உயர்ந்துள்ளது. கோடை யின் போது சராசரியாக 50 அடிக்கு கீழ் இருந்து வந்த நிலத்தடி நீர் மட்டம் தற்போது 5 முதல் 10 அடி அளவில் உயர்ந் துள்ளதால் பாசன விவசா யிகள் மகிழ்ச்சியடைந் துள்ளனர்.

**சம்பா பருவத்திற்கு பயிர் காப்பீடு வேளாண் இணை இயக்குனர் வலியுறுத்தல்**

பதிவு செய்த நாள் : நவம்பர் 14,2010,01:07 IST

கடலூர் : சம்பா பருவத்திற்கு பயிர் காப்பீடு செய்து பயன் பெற வேளாண் இணை இயக்குனர் வேண் டுகோள் விடுத்துள்ளார். இது குறித்து வேளாண்மை இணை இயக்குனர் இளங்கோவன் விடுத்துள்ள செய்திக் குறிப்பு: கடலூர் மாவட்டத் தில் சம்பா நடவு இதுவரை 2 லட்சத்து 32 ஆயிரத்து 500 ஏக்கர் நிறைவு பெற்றுள்ளது. இதில் 80 ஆயிரம் ஏக்கரில் "ராஜராஜன் 1000' சாகுபடி முறையில் நெல் நடவு மேற் கொள்ளப்பட்டுள்ளது. ஆண்டுதோறும் அக் டோபரில் இருந்து டிசம் பர் வரை பெய்யும் கனமழையினால் வெள்ளம் ஏற்பட்டு மகசூல் இழப்பு ஏற்படுகிறது. இதிலிருந்து விவசாயிகள், மகசூல் இழப்பிலிருந்து தங்களை காத்துக்கொள்ள பயிர் காப்பீடு செய்வது மிக அவசியம்.

இதற்கென தேசிய வேளாண் காப் பீட் டுத்திட்டத்தினை தேசிய வேளாண் காப்பீட்டு நிறுவனம் செயல்படுத்தி வருகிறது. விவசாயிகள் இத்திட் டத்தில் தங்களை பதிவு செய்துகொள்ள தேவையான காப்பீடு பிரிமியத் தினை உரிய படிவத்துடன் கூட்டுறவு வங்கிகளிலோ, தேசிய உடமையாக்கப் பட்ட வங்கிகளிலோ செலுத்த வேண்டும். மதிப்பீடு செய்யும்போது காப்பீட்டு தொகையில் 2 சதவீதம் தொகை பிரீமியமாக நிர்ணயிக்கப்படுகிறது. இதற்கான படிவங்கள் அந்தந்த வேளாண் உதவி இயக்குனர் அலுவலகங்களில் கிடைக்கும்.

**தோட்டக் கலைத் துறை துணை இயக்குனர் ஆய்வு**

பதிவு செய்த நாள் : நவம்பர் 14,2010,01:43 IST

திருக்கோவிலூர் : திருக்கோவிலூர் வட்டாரத்தில் நடந்து வரும் தோட்டக் கலைத் துறை பணிகளை துணை இயக்குனர் ஆய்வு செய்தார். முகையூர் ஒன்றியத்தில் பில்ராம்பட்டு, புதுப்பாளைம் பகுதிகளில் தோட்ட கலைத் துறை சார்பில் நடக்கும் பணிகளை துணை இயக்குனர் ஆய்வு செய்தார். பில்ராம்பட்டு கிராமத்தில் 2010-11ம் ஆண்டு தேசிய தோட்டக் கலை இயக்கத் திட்டத்தின் கீழ் 2.00 எக்டேர் பரப்பளவில் பயிர் செய்திருந்த "மா' நடவினை பார்வையிட்டு நீர் நிர்வாகம் குறித்து விவசாயிக்கு நேரடி விளக்கம் அளித்தார்.

புதுப்பாளையம் கிராமத்தில் உள்ள தோட்டக்கலை துல்லிய பண்ணை விவசாயிகளுக்கு தேசிய வேளாண்மை வளர்ச்சி திட்டத்தின் கீழ் நீரில் கரையும் உரங்களை வழங் கினார். பண்ணைய திட்டத்தில் சொட்டு நீர் பாசனத்தின் மூலம் பயிர் செய் திருந்த மருந்து கூர்க்கன் பயிரை பார்வை

யிட்ட பின் விவசாயிகளின் கேள்விகளுக்கு பதில ளித்தார். தோட்டக்கலை உதவி இயக்குனர் பாலகிருஷ்ணன் மற்றும் உதவி வேளாண்மை அலுவலர்கள் இருந்தனர்.

தினத் தந்தி

## மழை, வெள்ளத்தால் அதிக அளவில் பாதிப்பு பாகிஸ்தான் அரசு, இந்தியாவிலிருந்து காய்கறி இறக்குமதி செய்ய அனுமதி



*பாகிஸ்தானில் அண்மையில் ஏற்பட்ட வெள்ளத்தால் கடுமையான பாதிப்பு ஏற்பட்டுள்ளது. இதனால் காய்கறிகள் உள்ளிட்ட பல்வேறு அத்தியாவசியப் பொருள்களின் விலை உயரும் நிலை உருவாகியுள்ளது. விலை உயர்வை தடுக்கவும், பணவீக்கத்தைக் கட்டுப்படுத்தவும் அந்நாட்டு அரசு இந்தியாவிலிருந்து பல்வேறு காய்கறிகளை இறக்குமதி செய்ய அனுமதி அளித்துள்ளது.*

*விளைநிலங்கள் பாதிப்பு*

*வெள்ளம் காரணமாக பாகிஸ்தானில் 1.70 கோடி ஏக்கர் விளைநிலங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. இதனால் 100 கோடி டாலர் மதிப்புக்கு பொருட்சேதம் ஏற்பட்டுள்ளதாக உலக வங்கி மதிப்பீடு செய்துள்ளது. வெள்ளப் பாதிப்பு காரணமாக பருத்தி, கரும்பு, நெல், மக்காச்சோளம், பழங்கள் மற்றும் காய்கறிகள் உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளது. இதனால் இந்த பொருள்களை அந்நாடு அண்டை நாடுகளில் இருந்து அதிக அளவில் இறக்குமதி செய்ய வேண்டிய நிலை உருவாகியுள்ளது. குறிப்பாக இந்தியாவிலிருந்து பொருள்களை அதிகம் வாங்கும் என்று கூறப்படுகிறது.*

வெள்ளப் பாதிப்பு காரணமாக பாகிஸ்தானில் ஏற்கனவே தக்காளி விலை உயர்ந்து விட்டது. நல்ல விலை கிடைப்பதால் இந்திய ஏற்றுமதியாளர்கள் அந்நாட்டுக்கு அதிக அளவில் தக்காளியை ஏற்றுமதி செய்வதில் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

அமிர்தசரஸிலிருந்து லாகூருக்கு தினமும் நூற்றுக்கணக்கான டிரக்குகளில் தக்காளி அனுப்பப்பட்டு வருவதாக ஏற்கனவே செய்திகள் வெளிவந்துள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

வர்த்தக அமைச்சகம்

பாகிஸ்தான் நாட்டின் வர்த்தக அமைச்சகம் அதன் இறக்குமதி கொள்கை ஆணை 2009–ஐ திருத்தம் செய்து அறிவிக்கை வெளியிட்டுள்ளது. இதன் வாயிலாக காய்கறி இறக்குமதிக்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. இதன்படி, வாகா எல்லைப் பகுதி வாயிலாக பச்சை மிளகாய், குடமிளகாய், முட்டைக்கோஸ், முள்ளங்கி, வெண்டைக்காய், காலிஃபிளவர், இஞ்சி மற்றும் கேரட் ஆகிய காய்கறிகளை நம் நாட்டிலிருந்து இறக்குமதி செய்து கொள்ள வகை செய்யப்பட்டுள்ளது. இந்நிலையில், அங்கு இப்போது சுமார் 42 இறக்குமதியாளர்கள், காய்கறிகளை இறக்குமதி செய்து கொள்ள அனுமதி கேட்டு வர்த்தக அமைச்சகத்தை அணுகியுள்ளனர்.

## ஆன்லைன் வர்த்தகத்தால் வியாபாரிகள் அதிருப்தி பாமாயில், சன்பிளவர் ஆயில், தேங்காய் எண்ணெய் விலை உயர்வு துவரம்பருப்பு, உளுத்தம் பருப்பு மூட்டைக்கு ரூ.500 குறைந்தது

சென்னை, நவ.15–

ஆன்லைன் வர்த்தகத்தால் பாமாயில், சன்பிளவர் ஆயில், தேங்காய் எண்ணெய் விலை திடீர் என்று உயர்ந்துள்ளது.

ஆன்லைன் வர்த்தகம்

ஆன்லைன் வர்த்தக சூதாட்டத்தால் தங்கம் விலை ஒரு பவுன் ரூ.15 ஆயிரத்தை தாண்டிவிட்டது. இது மட்டும் அல்லாமல் ஆன்லைன் வர்த்தகத்தால் அனைத்து உணவு பொருட்கள் விலையும் நாளுக்கு நாள் உயர்ந்துகொண்டே வருகிறது. ஆன்லைன் வர்த்தகத்தின் மூலம் சேரவேண்டிய சேவை வரி முறையாக சேர்ந்துவிடுவதால், இது பற்றி மத்திய அரசு கண்டுகொள்வது இல்லை என்று வியாபாரிகள் குற்றம் சாட்டுகிறார்கள்.

ஆன்லைன் வர்த்தகம் அமெரிக்க டாலர் மதிப்பு குறைவு, சர்வதேச மார்க்கெட்டில் ஆயில் விலை உயர்வு போன்ற காரணங்களால் கடந்த வாரம் ஒரு லிட்டர் பாமாயில் பாக்கெட் ரூ.48–க்கு விற்பனையானது, தற்போது ரூ.56 ஆகவும், சன்பிளவர் ஆயில் ஒரு

லிட்டர் பாக்கெட் ரூ.68–க்கு விற்பனையானது, ரூ.74 ஆகவும் உயர்ந்துள்ளது என்று அனைத்து மளிகை வியாபாரிகள் சங்க தலைவர் எஸ்.பி.சொரூபன் தெரிவித்தார்.

முதல் ரக தேங்காய் எண்ணெய் ஒரு லிட்டர் பாக்கெட் ரூ.100–க்கு விற்பனையானது, ரூ.110 ஆகவும், இரண்டாம் ரக தேங்காய் எண்ணெய் ஒரு லிட்டர் பாக்கெட் ரூ.80–க்கு விற்பனையானது, ரூ.95 ஆகவும், அக்மார்க் நல்லெண்ணெய் ஒரு லிட்டர் பாக்கெட் ரூ.120–க்கு விற்பனையானது, ரூ.130 ஆகவும், இரண்டாம் ரக நல்லெண்ணெய் ஒரு லிட்டர் பாக்கெட் ரூ.100–க்கு விற்பனையாது, ரூ.110 ஆகவும், சாதாரக நல்லெண்ணெய் ஒரு லிட்டர் பாக்கெட் ரூ.60–க்கு விற்பனையானது, ரூ.75 ஆகவும், ஒரு கிலோ டால்டா ரூ.55–க்கு விற்பனையானது, ரூ.65 ஆகவும் உயர்ந்துள்ளது.

சர்க்கரை விலை உயர்வு

கடந்த மாதம் மத்திய அரசு அனைத்து மில்களுக்கும் 17½ லட்சம் டன் சர்க்கரை ஒதுக்கீடு செய்தது. ஆனால் இந்த மாதம் குறைந்த அளவில் 15 லட்சம் டன் சர்க்கரைதான் ஒதுக்கீடு செய்துள்ளது. இதனால் கடந்த வாரம் ஒரு கிலோ சர்க்கரை ரூ.28–க்கு விற்பனையானது, தற்போது ரூ.31 ஆக உயர்ந்துள்ளது. ராஜஸ்தான் மாநிலத்தில் இருந்து வரத்து குறைவால் கடந்த வாரம் ஒரு கிலோ தனியா (மல்லி) ரூ.40–க்கு விற்பனையானது, ரூ.50 ஆக உயர்ந்துள்ளது.

விலை உயர்வை கட்டுப்படுத்த மத்திய அரசு வெளிநாடுகளுக்கு ஏற்றுமதியாகக்கூடிய பூண்டின் அளவை குறைத்துள்ளது. இதனால் கடந்த வாரம் மலை பூண்டு ஒரு கிலோ ரூ.260–க்கு விற்பனையானது, ரூ.220 ஆகவும், பெரிய ரக பூண்டு ஒரு கிலோ ரூ.200–க்கு விற்பனையானது, ரூ.170 ஆகவும், சிறிய ரக பூண்டு ஒரு கிலோ ரூ.180–க்கு விற்பனையானது, ரூ.150 ஆகவும் குறைந்துள்ளது. பூண்டு விலை சற்று குறைந்தாலும் சில்லரை மளிகை கடைகளில் வழக்கம் போல விலையை குறைக்காமல் பழைய விலைக்கே விற்பனை செய்துவருவதாக பொதுமக்கள் குறைகூறுகிறார்கள்.

துவரம்பருப்பு விலை குறைந்தது

கடந்த ஆண்டு துவரம்பருப்பு ஒரு கிலோ ரூ.98–க்கும், உளுத்தம்பருப்பு கிலோ ரூ.90–க்கும், பாசிப்பருப்பு கிலோ 95–க்கும் விற்பனையானது. இதேபோல இந்த ஆண்டும் நல்ல விலை கிடைக்கும் என்று துவரை, உளுந்து போன்ற பருப்பு வகைகளை குஜராத், மத்தியபிரதேசம் ஆகிய மாநிலங்களில் உள்ள விவசாயிகள் அதிக அளவில் பயிர்செய்தனர். இதனால் இந்த ஆண்டு அதிக விளைச்சல் காரணமாக பருப்பு வகைகள் விலை குறைந்து வருகிறது.

மேலும் பருப்பு வகைகள் ஆன்லைன் வர்த்தகத்தில் இல்லாததாலும் இதன் விலையில் சரிவு ஏற்பட்டுள்ளது. 100 கிலோ கொண்ட முதல் ரக உளுத்தம்பருப்பு மூட்டை

ரூ.7,000 விற்பனையானது, ரூ.6,600 ஆகவும், இரண்டாம் ரக உளுத்தம்பருப்பு மூட்டை ரூ.6,200–க்கு விற்பனையானது, ரூ.5,500 ஆகவும் குறைந்துள்ளது. இதேபோல முதல் ரக துவரம் பருப்பு 100 கிலோ மூட்டை ரூ.6,500–க்கு விற்பனையானது, ரூ.5,500 ஆகவும், இரண்டாம் ரக துவரம் பருப்பு மூட்டை ரூ.5,800–க்கு விற்பனையானது, ரூ.4,600 ஆகவும் குறைந்துள்ளது. பருப்பு வகைகள் மேலும் குறைய வாய்ப்பு இருப்பதாக வியாபாரிகள் எதிர்பார்க்கிறார்கள்.

சர்க்கரை விலை உயர்வு

கடந்த மாதம் மத்திய அரசு அனைத்து மில்களுக்கும் 17½ லட்சம் டன் சர்க்கரை ஒதுக்கீடு செய்தது. ஆனால் இந்த மாதம் குறைந்த அளவில் 15 லட்சம் டன் சர்க்கரைதான் ஒதுக்கீடு செய்துள்ளது. இதனால் கடந்த வாரம் ஒரு கிலோ சர்க்கரை ரூ.28–க்கு விற்பனையானது, தற்போது ரூ.31 ஆக உயர்ந்துள்ளது. ராஜஸ்தான் மாநிலத்தில் இருந்து வரத்து குறைவால் கடந்த வாரம் ஒரு கிலோ தனியா (மல்லி) ரூ.40–க்கு விற்பனையானது, ரூ.50 ஆக உயர்ந்துள்ளது.

விலை உயர்வை கட்டுப்படுத்த மத்திய அரசு வெளிநாடுகளுக்கு ஏற்றுமதியாகக்கூடிய பூண்டின் அளவை குறைத்துள்ளது. இதனால் கடந்த வாரம் மலை பூண்டு ஒரு கிலோ ரூ.260–க்கு விற்பனையானது, ரூ.220 ஆகவும், பெரிய ரக பூண்டு ஒரு கிலோ ரூ.200–க்கு விற்பனையானது, ரூ.170 ஆகவும், சிறிய ரக பூண்டு ஒரு கிலோ ரூ.180–க்கு விற்பனையானது, ரூ.150 ஆகவும் குறைந்துள்ளது. பூண்டு விலை சற்று குறைந்தாலும் சில்லரை மளிகை கடைகளில் வழக்கம் போல விலையை குறைக்காமல் பழைய விலைக்கே விற்பனை செய்துவருவதாக பொதுமக்கள் குறைகூறுகிறார்கள்.

துவரம்பருப்பு விலை குறைந்தது

கடந்த ஆண்டு துவரம்பருப்பு ஒரு கிலோ ரூ.98–க்கும், உளுத்தம்பருப்பு கிலோ ரூ.90–க்கும், பாசிப்பருப்பு கிலோ 95–க்கும் விற்பனையானது. இதேபோல இந்த ஆண்டும் நல்ல விலை கிடைக்கும் என்று துவரை, உளுந்து போன்ற பருப்பு வகைகளை குஜராத், மத்தியபிரதேசம் ஆகிய மாநிலங்களில் உள்ள விவசாயிகள் அதிக அளவில் பயிர்செய்தனர். இதனால் இந்த ஆண்டு அதிக விளைச்சல் காரணமாக பருப்பு வகைகள் விலை குறைந்து வருகிறது. மேலும் பருப்பு வகைகள் ஆன்லைன் வர்த்தகத்தில் இல்லாததாலும் இதன் விலையில் சரிவு ஏற்பட்டுள்ளது. 100 கிலோ கொண்ட முதல் ரக உளுத்தம்பருப்பு மூட்டை ரூ.7,000 விற்பனையானது, ரூ.6,600 ஆகவும், இரண்டாம் ரக உளுத்தம்பருப்பு மூட்டை ரூ.6,200–க்கு விற்பனையானது, ரூ.5,500 ஆகவும் குறைந்துள்ளது. இதேபோல முதல் ரக துவரம் பருப்பு 100 கிலோ மூட்டை ரூ.6,500–க்கு

*விற்பனையானது, ரூ.5,500 ஆகவும், இரண்டாம் ரக துவரம் பருப்பு மூட்டை ரூ.5,800–க்கு விற்பனையானது, ரூ.4,600 ஆகவும் குறைந்துள்ளது. பருப்பு வகைகள் மேலும் குறைய வாய்ப்பு இருப்பதாக வியாபாரிகள் எதிர்பார்க்கிறார்கள்.*

## *குன்னூர் ஏல மையத்தில் 26 சதவீத தேயிலை தூள் தேக்கம்*

*குன்னூர், நவ.15–*

*குன்னூர் ஏல மையத்தில் 26 சதவீத தேயிலை தூள் விற்பனையாகமல் தேக்கமடைந்தது.*

*தேயிலை தூள் ஏலம்*

*வாரந்தோறும் வியாழன், வெள்ளி ஆகிய இரு நாட்கள் குன்னூர் தேயிலை ஏல மையத்தில் தேயிலை ஏலம் நடைபெற்று வருகிறது. விற்பனை எண் 45–க்கான ஏலம் கடந்த 11, 12 ஆகிய தேதிகளில் நடைபெற்றது.*

*ஏலத்திற்கு மொத்தம் 12 லட்சத்து 18 ஆயிரம் கிலோ தேயிலை தூள் வந்தது. இதில் 8 லட்சத்து 57 ஆயிரம் கிலோ இலை ரகமாகவும், 3 லட்சத்து 61 ஆயிரம் கிலோ டஸ்ட் ரகமாகவும் இருந்தது.*

*பாகிஸ்தான்*

*ஏலத்தில் உள்நாட்டு வர்த்தகம் களை கட்டாமல் மந்தமாக இருந்தது. வெளி நாட்டு வர்த்தகர்களை பொறுத்த வரை ரஷ்யா, பாகிஸ்தான் வர்த்தகர்கள் ஓரளவு தேயிலை தூளை வாங்கினர். ஏல மையத்தில் விற்பனையில் மந்த நிலை நிலவியதாலும், தேயிலை தூளுக்கு வர்த்தகர் களிடையே போட்டி இல்லாததாலும் தேயிலை தூளுக்கு 3 ரூபாய் விலை வீழ்ச்சி ஏற்பட்டது.*

*தேயிலை தூள் தேக்கம்*

*போட்டி இல்லாத காரணத் தால், மொத்த தேயிலை தூள் அளவில் 26 சதவீதம் தேயிலை தூள் தேக்கம் அடைந்தது. சி.டி.சி. ரக தேயிலை தூளின் உயர்ந்த பட்ச விலையாக 131 ரூபாயும், ஆர்தோடக்ஸ் ரக தேயிலை தூளின் உயர்ந்த பட்ச விலை 189 ரூபாயாகவும் இருந்தது.*

*48 தொழிற்சாலைகள் தங்களது சி.டி.சி. ரக தேயிலை தூளை 100 ரூபாய்க்கு மேல் விற்பனை செய்தனர். ஆர்தோடக்ஸ் தேயிலையை உற்பத்தி செய்த தொழிற் சாலைகளில் 30 தொழிற் சாலைகளின் தேயிலை தூள் 100 ரூபாய்க்கு மேல் ஏலம் சென்றது.*

தேயிலை தூளின் சராசரி விலையாக இலை ரகத்தின் சாதாரண வகை 40 ரூபாயில் இருந்து 45 ரூபாய் வரையிலும், உயர்விலை தேயிலை தூள் 80 ரூபாயில் இருந்து 110 ரூபாய் வரையிலும் ஏலம் சென்றது.

டஸ்ட் ரகத்தின் சாதாரண வகை 44 ரூபாய் முதல் 52 ரூபாய் வரையிலும், விலை உயர்ந்த தேயிலை தூள் 90 ரூபாயில் இருந்து 120 ரூபாய் வரையிலும் ஏலம் சென்றது.

கவலை

விற்பனை எண் 46–க்கான ஏலம் வருகிற 18, 19 ஆகிய தேதிகளில் நடக்கிறது. இந்த ஏலத்திற்கு மொத்தம் 9 லட்சத்து 38 ஆயிரம் கிலோ தேயிலை தூள் வருகிறது.

குன்னூர் ஏல மையத்தில் தேயிலை தூளுக்கு விலை வீழ்ச்சி தொடர்ந்து ஏற்பட்டு வருவதால் பச்சை தேயிலைக்கும் விலை வீழ்ச்சி ஏற்படும் அபாயம் உள்ளது. இதனால் நீலகிரி மாவட்ட சிறு தேயிலை விவசாயிகள் பெரிதும் கவலை அடைந்துள்ளனர்.

## குன்னூர் தோட்டக்கலை துறை பண்ணையில் சில்வர் ஓக் மர நாற்றுக்கள் தேக்கம்

குன்னூர், நவ.15–

சில்வர் ஓக் மர நாற்றிற்கு வழங்கப்பட்டு வந்த மானியம் ரத்து செய்யப் பட்டதால் குன்னூர் பகுதியில் உள்ள தோட்டக்கலை துறை பண்ணையில் நாற்றுக்கள் விற்பனையாகமல் தேக்க மடைந்துள்ளன.

ஈரப்பதம்

நீலகிரி மாவட்டத்தில் கம் பெனி தேயிலை எஸ்டேட்கள் சிறு விவசாயிகளின் தேயிலை தோட்டங்கள் உள்ளன. தேயிலைக்கு மிதமான வெப்ப மும், மழையும் தேவைப்படு கிறது. மிதமான சூரிய ஒளியில் தேயிலை செடிகளில் உள்ள தேயிலை கொழுந்துகள் பச்சையம் சேகரித்து வீரியமாக வளர்கிறது.

சூரிய ஒளி மற்றும் வெப்பம் அதிக அளவில் இருக்கும் போது மண்ணில் உள்ள ஈரப்பதம் ஆவியாகி விடுகின்றன. இதன் காரண மாக தேயிலை செடிகள் காய்ந்து விடும் அபாய நிலை ஏற்படுகிறது.

மரங்கள்

தேயிலை செடிகளை அதிக சூரிய ஒளியில் இருந்து காப் பாற்ற தேயிலை செடிகளுக்கு இடையில் நிழல் தரும் மரங்கள் நடவு செய்யப்படுகிறது. நிழல் மரங்கள் தொடர்ந்து தழைக்க கூடிய மரமாக இருக்க வேண்டும். வறட்சி காலத்தில் இலையை உதிர்த்து விடாமல் ஆழமாக வேர் உள்ளதாக இருக்க வேண்டும். ஓரளவு சூரிய வெளிச்சம்

மரத்தின் இலைகளின் வழியே ஊடுருவி செல்ல கூடியதாய் இருக்க வேண்டும். இதனை கருத்தில் கொண்டு தேயிலை தோட்டங்களில் நிழல் மரங்களாக நடவு செய்ய சில்வர் ஓக் நாற்றுக்கள் பரிந் துரை செய்யப்படுகின்றன. சில்வர் ஓக் மர நாற்றுக்கள் 20ஙீ20 என்ற அளவில் நடவு செய்ய பரிந்துரை செய்யப் படுகிறது.

சில்வர் ஓக் மரங்கள்

சில்வர் ஓக் மரங்கள் சில ஆண்டுகளில் வளர்ந்து பெரிதாகி விடுவதால் இதனை வெட்டி விற்பனை செய்து விடுவதும் உண்டு. எனவே பெரும்பாலான தேயிலை தோட்டங்களில் நிழல் மரங்களாக சில்வர் ஓக் மரங்கள் நடவு செய்யப்படு கின்றன. தமிழ்நாடு தோட்டக்கலை துறை சார்பில் தேயிலை நாற்றுக்களும், சில்வர் ஓக் நாற்றுக்களும்உற்பத்தி செய்யப் பட்டு மானிய விலையில் விவசாயிகளுக்கு வழங்கப் பட்டு வந்தது. ஆனால் கடந்த 2 ஆண்டுகளாக சில்வர் ஓக் நாற்றுகளுக்கு மானியம் ரத்து செய்யப்பட்டது.

மானியம் ரத்து

முன்பு சில்வர் ஓக் நாற்றுக்கள் மானிய விலையில் 2 ரூபாய்க்கு வழங்கப்பட்டு வந்தது. கடந்த 2 ஆண்டுகளாக மானியம் ரத்து செய்யப்பட்டு உள்ளதால் ஒரு நாற்றின் விலை 4 ரூபாய் என நிர்ணயம் செய்யப்பட்டு உள்ளது.

தனியார் உற்பத்தி செய்யும் சில்வர் ஓக் நாற்றுக்கள் 3 ரூபாயில் இருந்து ரூ.3.50 வரை விற்பனை விலையாக நிர்ணயம் செய்யப்படுகிறது. வனத்துறை சார்பிலும், சில்வர் ஓக் நாற்றுக்கள் உற்பத்தி செய்யப்பட்டு, மனு செய்த விவசாயிகளுக்கு இலவசமாக வழங்கப்படுகிறது.

தோட்டக்கலை துறை

அரசு துறையான தோட்டக் கலை துறையில் உற்பத்தி செய்யப்படும் சில்வர் ஓக் நாற்றுக்களுக்கு மானியம் ரத்து செய்யப்பட்டதால் விவசாயிகள் தோட்டக்கலை துறையில் இருந்து சில்வர் ஓக் நாற்றுக்களை ஒரு நாற்றுக்கு 4 ரூபாய் கொடுத்து வாங்க தயங்கி வருகிறார்கள்.

இதன் காரணமாக தோட்டக்கலை துறையின் மூலம் உற்பத்தி செய்யப்பட்ட சில்வர் ஓக் நாற்றுக்கள் வாங்க ஆட்கள் இல்லாமல் பண்ணை களில் தேக்கம் அடைந்து உள்ளது. மானியம் ரத்து செய்யப்பட்டதால் சில்வர் ஓக் நாற்றுக்கள் அதிகளவில் தேக்கம் அடைந்துள்ளதாக கூறப்படுகிறது.

சில்வர் ஓக் நாற்றுக்களுக்கு மானியம் கொடுத்து விலை குறைக்கப்பட்டால் தோட்டக் கலை துறை பண்ணையில் உற்பத்தி செய்யப்பட்டு உள்ள சில்வர் ஓக் நாற்றுக்கள்

விற்பனையாவதற்கு வாய்ப்புகள் உள்ளது என்று விவசாயிகள் தரப்பில் கூறப் படுகிறது.